ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1546/9 - 2008 අප්‍රේල් 22 වැනි අඟහරුවාදා - 2008.04.22

*1546/9 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவைக் கட்டணம்*

*2008 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதார சேவைக்கட்டணம் (திருத்தம்) சட்டத்தினால் இறுதியாக திருத்தம் செய்யப்பட்ட, 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதார சேவைக் கட்டணச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

*ரஞ்சித் சியம்பலாபிட்டிய,*
*பதில் நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2008, ஏப்பிறல் 11.*

**ஒழுங்குவிதி**

*2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவைக் கட்டணச் சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்குரித்துடையதாக ஆக்கப்பட்டு, 2007 யூலை மாதம் 18 ஆந் திகதியுடைய 1506/6 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 2007 யூன் மாதம் 20 ஆந் திகதியுடைய 1502/10 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 04 ஆம் பந்தி அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பந்தி உட்சேர்க்கப்படுவதன் மூலம் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.*

*'04 ஏதேனும் வியாபாரம் ஒன்று அல்லது தொழில் முயற்சியொன்று 2008 ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதியில் ஆரம்பமாகும்ஏதேனும் காலாண்டுக்காக.-*

(i) *யாரேனும் ஆளொருவர் அல்லது கூட்டுத் தொழில் முயற்சியொன்றினால் நடாத்தப்பட்டுவரும், வெட்டப்படாத உருவத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பட்டைதீட்டப்படாத வைரம் அல்லது வெட்டி பதனிடப்பட்டு இறக்குமதி செய்யப்படும் இரத்தினக்கல் வியாபாரம் ஒன்று அல்லது தொழில் முயற்சியொன்றில் அந்தக் காலாண்டுக்காக பதனிடப்படாத வைரங்களின் ஆ. கா. கே.* (CIF) *பெறுமதியை மீறியதாக அந்த ஏற்றுமதி க. தா. இ.* (FOB) *பெறுமதியின் மேலதிகம் ;*

(ii) *யாரேனும் ஆளொருவர் அல்லது கூட்டுத் தொழில் முயற்சியொன்றினால் நடாத்தப்பட்டுவரும்* NFE *அடிப்படையிலான இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினால் உற்பத்தி செய்யப்பட்ட தைத்த ஆடைகள் இறக்குமதி செய்யும் வியாபாரம் ஒன்றில் அல்லது தொழில் முயற்சியொன்றில் அக்காலாண்டுக்காக அது போன்ற பொருட்களினால் ஆ. கா. கே.* (CIF) *பெறுமதியை விஞ்சும் அந்த ஏற்றுமதிகளின் க. த. இ.* (FOB) *பெறுமதியின் மேலதிகம் ;*

(iii) யாரேனும் ஆளொருவர் அல்லது கூட்டுத் தொழில் முயற்சியொன்றினால் நடாத்தப்பட்டுவரும் NFE அடிப்படையிலான இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களினால் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட மேலே (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தைத்த ஆடைகள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் ஏற்றுமதி செய்யும் வியாபாரம் ஒன்று அல்லது தொழில் முயற்சியொன்று அக்காலாண்டுக்காக அது போன்ற பொருட்களின் ஆ. கா. கே. (CIF) பெறுமதியை விஞ்சும் அந்த ஏற்றுமதிகளின் க. த. இ. (FOB) பெறுமதியின் மேலதிகம் ;

(iv) யாரேனும் ஆரம்ப வியாபாரி ஒருவரினால் -

பிணையங்கள் கொள்வனவு செய்வதற்காக அக்காலாண்டுப் பகுதியில் முதலீடு செய்யப்பட்ட பணத்தொகை; மற்றும்

அக்காலாண்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஏதேனும் மீள் கொள்வனவு செய்யும் கொடுக்கல் வாங்கலுக்கு உரியதாக செலுத்தப்பட்ட வட்டி அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட தரவு.

ஆகிய இரண்டினதும் கூட்டுத்தொகையை விஞ்சுகின்ற, அந்த ஆரம்ப வியாபாரிக்கு சொந்தமாக இருந்த பிணையங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கப்பெற்ற பணத்தொகையின் மேலதிகம் ;

சொல்லப்பட்ட வியாபாரத்தின் அல்லது தொழில் முயற்சியின் புரள்வு ஆகும்.

சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின், (3) உப பிரிவில் புரள்வு எனும் வசனத்தின் பொருள் கோடலின் போது முறையே (அ) பந்தியின் மற்றும் (ஆ) பந்தியின் நிச்சயிக்கப்பட்ட குறிப்பிடப்பட்டுள்ள கழித்தல் மற்றும் கூட்டல் பற்றி உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் .'

5-79

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.